# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 10/2017** **நாள் : 29/05/2017**

**பெறுநர்**
மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்
மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள்

தோழர்களே

வணக்கம்

ஊதிய உயர்வு வேலைப்பளு சம்மந்தமாக வாரியத்துடன் 29.05.2017 அன்று பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையில் மத்திய அமைப்பின் தலைவபொதுச்செயலாளர், பொருளாளர், உட்பட 14 தோழர்கள் கலந்து கொண்டனர்.

நாம் 01.12.2015 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு,வழங்குவதற்கான ஆலோசனையைக் கூட கொடுக்காமல் களப்பிரிவு, கணக்கீட்டுப்பிரிவு, கணக்குப்பிரிவு, பண்டகசாலை பிரிவு உள்ளிட்ட பிரிவுகளின் ஊழியர்களுக்கு 25சதவீதம் வேலைப்பளுவை உயர்த்தி ஆலோசனை கொடுப்பது தொழிலாளர்களின் உள்ளக்குமுறலை புரிந்து கொள்ளாமல் வாரியம் அளித்துள்ளது எனத் தெரிவித்தோம்.

மின்வாரியத்தில் பணியாற்றும் களப்பிரிவு. கணக்கீட்டுப்பிரிவு, வருவாய் பிரிவு, பண்டகசாலை பிரிவு போன்ற பிரிவுகளுக்கு ஏற்கனவே வரையறுத்துள்ள வேலைபளு தாங்க முடியாத நிலையில் உள்ள போது, மேலும் வேலைபளு உயர்த்துவது சம்மந்தமான வாரியம் அளித்துள்ள வேலைபளு சம்மந்தமான ஆலோசனையை முற்றிலுமாக ஏற்க முடியாது என நிராகரித்தோம்.

வருவாய் பிரிவில் கணக்கு மேற்பார்வையாளர் பதவி பலகாலியாக கிடக்கின்றது. அதை நிரப்ப எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களின் பணியை 12,000-ல் இருந்து 15,000 ஆக உயர்த்துவது களப்பிரிவில் தொழில்நுட்பமோ, மாற்றங்களோ ஏதும் இல்லாத நிலையில் கூடுதலான மின் இணைப்புகள், மின் மாற்றிகளை உயர்த்துவது சரியல்ல என்றும்,

கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு தற்போது டிஜிட்டல் மீட்டரில் ரீடிங் எடுப்பதில் குறைந்தபட்சம் ஒரு மின் இணைப்புக்கு 8 நிமிடம் ஆகும் நிலையிலும் வெவ்வேறு மீட்டர்கள் மின் இணைப்பில் உள்ளதையும் அதன் மின் குறியீடு அளவு பாராமீட்டர் வித்தியாசப்படுவதையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் ஊதிய உயர்வு வழங்கும் போதெல்லாம் பணிச்சுமையை அதிகமாக்க வேண்டும் என்ற யாந்திரிக நிலையில் வேலைபளு உயர்வுக்கான ஆலோசனையை அளித்துள்ளதை ஏற்க இயலாது என்றும், எடுத்துரைத்தோம்.

வாரியம் வேலைபளு சம்மந்தமாக போட்ட ஒப்பந்தத்தையோ, வெளியிட்ட வாரிய உத்தரவையோ சிறிதுகூட அமல்படுத்தாத நிலையையே வாரியம் எடுத்து வருகிறது. உதாரணமாக 2014,2015,2016 ஆம் ஆண்டுகளில் உயர்ந்துள்ள மின் இணைப்புகளை கணக்கில் கொண்டு பதவிகளை அனுமதித்து காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டும் என்ற ஒப்பந்த ஷரத்தையோ, வாரிய உத்தரவையோ அமல்படுத்தவில்லை. என்பதை எடுத்துச்சொல்லி மூன்றாண்டுகளாக உயர்ந்த மின் இணைப்புகளுக்கேற்ப பதவிகளை அனுமதித்து காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டும் என்று நமது தரப்பில் வலுவாக எடுத்துரைத்தோம்.

வேலைபளுவோடு, காலிப்பணி இடங்களை நிரப்புவது என்பதும் இரண்டற கலந்தது என்பதை எடுத்துச்சொல்லி மின்வாரியத்தில் வாரியம் அளித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் 35,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ளது. அதிலும் குறிப்பாக 15000-க்கும் மேற்பட்ட களஉதவியாளர் பதவி காலிப்பணி இடங்களாக உள்ளது. அதில் மின் வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு பணி நிரந்தரம் செய்து ஐடிஐ படித்தவர்களையும் வேலை தேடிதரும் அலுவலகங்கள் மூலம் காலிப்பணி இடங்களை நிரப்புவதற்கு வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை தவிர்த்து ஆயிரக்கணக்கில் களப்பணியாளர் பதவிகளை காலியாக வைத்து கொண்டு 700 காலிப்பணி இடங்களை நிரப்புவது என்பது எல்லாம் சரியல்ல களஉதவியாளர் காலி பணி இடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நமது தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட உதய்திட்டத்தை ஏற்று அதன் ஷரத்துக்களை அமல்படுத்தும் விதமாக கேபிள்களை முழுவதும் புதியதாக மாற்றுவது, மின்மாற்றி, பில்லர் பாக்ஸ், போன்றவைகளை அனைத்தையும் புதியதாக மாற்றி மின் விநியோக வட்டங்களுக்கு புதிய வடிவத்தை அளித்து மின் இழப்பை குறைப்பதற்கான நடவடிக்கையை வாரியம் எடுக்கின்றது. மின் விநியோக வட்டங்களின் அடிப்படை கட்டமைப்பையே புதியதாக மாற்றும் கூடுதல் பணியை நிரந்தர தொழிலாளர்களைக் கொண்டு செய்ய வைப்பது என்பது இயலாத ஒன்று ஆகையால் இப்பணிகளை K2 அக்ரிமென்ட், சிட் அக்ரிமென்ட் போன்றவைகளை மூலம் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கமர்த்தி அந்த பணிகளை செய்திட வேண்டும் என்று நாம் அழுத்தமாக வாதிட்டபோது K2 அக்ரிமென்ட்டில் உள்ள சில விதிகளை தளர்த்தி ஒப்பந்த தொழிலாளர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

பதவிகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் பணிச்சுமை மாற்றமும் - மின்வாரிய ஊழியர்களின் பதவி உயர்வும் இரண்டற கலந்த ஒன்று என்ற அடிப்படையில் மின்வாரியத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்கள், கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள், பொறியாளர்கள், குறிப்பாக இயந்திரவியல் பொறியாளர்கள், இரு பதவி உயர்வோடு பணி ஓய்வு பெறும் அவலநிலை உள்ளது என்றும், இது சம்மந்தமாக 08.07.1998 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தையொட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மின்வாரிய ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை அகற்றுகின்ற வகையில் டைம்பவுண்டு புரமோஷன், மின்வாரிய ஊழியர்களின் பணிக்காலத்தில் மூன்று பதவி உயர்வு அளிக்கின்ற வகையில் பதவி உயர்வு வாய்ப்புக்களை உருவாக்க கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்றும் இதற்கான நடைமுறை விதிகளை தொழிற்சங்கமும், மின்வாரியமும் கலந்து பேசி அமல்படுத்திடலா **என்று 1998 ஆம் ஒப்பந்தத்தில்**

**ஷரத்து சேர்த்து 20 ஆண்டுகள் ஆன பின்னரும் அது சம்மந்தமாக முடிவு எடுக்காமல் இருப்பது சரியல்ல என்று வலுவாக வாதிட்டத்தின் அடிப்படையில் வாரியம் இதற்கான ஒரு ஆலோசனையை தயாரித்துள்ளதாகவும் அரசோடு பேசிய பின்னர்,** தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி வெகு விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது.

வேலைபளு ஒப்பந்தத்திற்கு உட்படாத வட்ட மத்திய அலுவலகம் செலவீனப்பகுதி, அனல், புனல் ,பொதுக்கட்டுமான வட்டம் போன்ற பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்க ஒரு ஆலோசனைக் கமிட்டி **அமைக்க சங்கம் சென்ற ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் கேட்டுக் கொண்டதிற்கிணங்க ஒருகுழு அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்திரவு சில தினங்களில் வெளியிடப்படும் என வாரிய தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.**

மின்வாரிய களப்பிரிவு ஊழியர்களில் இருவழிப்பாதை, ஒருவழிப்பாதை, கல்வியறிவு உள்ளவர்கள், குறைந்த கல்வியறிவு உள்ளவர்கள் என்ற காரணத்தை எல்லாம் சொல்லி அவர்களின் பதவி உயர்வில் ஒரு குழுப்பமான நிலைமை நிலவுவதை வாரியமும் உணர்ந்து இருக்கின்றது. இதில் ஒரு பகுதி ஊழியர்கள் விரைவான பதவி உயர்வும், ஒரு பகுதி ஊழியர்கள் அடுத்த பதவி உயர்வுக்கு பல்லாண்டுகள் காத்திருக்கும் தேக்க நிலையும், அதாவது ஒரு பகுதி ஊழியர்கள் 1.1 என்ற விகிதத்தில் பதவி உயர்வும் ஒரு பகுதி ஊழியர்கள் 7:1 என்ற தேக்க நிலை பதவி உயர்வும் உள்ளதை எல்லாம் வாரியம் உணர்ந்துள்ள நிலையில் அதை அகற்றுகின்ற விதமாக வாரியம் ஆலோசனை அளிக்காமல் ஒட்டு மொத்தமாக 25 சதவீதம் வேலைபளுவிற்கான ஆலோசனை வழங்கி உள்ளது என்பது தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் மனநிறைவோடு மக்கள் சேவையை தொடர்வதற்கான ஆலோசனையை வழங்காதது வாரிய ஊழியர்களின் நலனை கணக்கில் கொள்ளாமல் ஆலோசனையை அளித்தது சரியல்ல என்று எடுத்துரைத்தோம்.

மின் வாரியத்தில் பணியாற்றும் பகுதிநேர ஊழியர்களுக்கு ஆங்காங்கே அவரவர்கள் நினைக்கின்ற தொகுப்பூதியம் என்பதை மாற்றி ஏற்கனவே பகுதிநேர ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கியதைப்போல காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும் என்று 22.12.2016 இல் நடைபெற்ற காத்திருக்கும் போராட்டத்தில் ஒரு கோரிக்கையாக வைக்கப்பட்டு அதையொட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 31.01.2017-க்குள் அதற்கான உத்தரவு வெளியிடப்படும் என எழுத்து பூர்வமான வாக்குறுதி அளித்து ஆறுமாதங்கள் கடந்த பின்னரும் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதை அழுத்தமாக எடுத்துரைத்தோம்.

இயக்குநர்/விநியோகம் அவர்கள் தான் நேரடியாக தலையிட்டு சில தினங்களில் இதன் மீது உத்தரவு வழங்கப்படும் என தெரிவித்தார்கள்.

மின்வாரியத்தில் ஊழியர்களை பணிக்கு நியமிக்கின்ற போது அப்பணிக்கு வாரியத்தில் அப்பரண்டீஸாக பணியாற்றி இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தோம்.

வேலைபளு சம்மந்தமான வாரிய ஆலோசனையை நாங்கள் ஏற்கவில்லை என்றும், அடுத்த பேச்சுவார்த்தையின் போது ஊதிய உயர்வுக்குண்டான ஆலோசனையைத் தான் முன் வைக்க வேண்டும். அதில் காலதாமதம் ஏற்படுமானால் அதிருப்தி அடைந்த ஊழியர்கள் போராட்டகளத்திற்கு

சென்றால் அதற்கு மின் வாரியமே பொறுப்பு ஏற்க வேண்டும் என நமது தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த பேச்சு வார்த்தையில்

1. வேலைபளு ஒப்பந்தத்திற்கு உட்படாத இதரபகுதி ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக குழு அமைத்து அதற்கான ஆணையிடப்படும்.
2. பதவி உயர்வில் உள்ள தேக்கநிலையை அகற்றுகின்ற **வகையில் டைம்பவுண்டு** புரமோஷன் வழங்குவது சம்மந்தமாக வாரியம் தயாரிக்கப்பட்ட திட்டத்தை அரசின் **ஒப்புதல் பெற்று அமலாக்க முயற்சிகள் எடுக்கப்படும் என்ற வாக்குறுதி பெறப்பட்டுள்ளது.**
3. மின் விநியோக வட்டங்களில் உதய்திட்ட பணிகளை மேற்கொள்ள K2 அக்ரிமென்ட் விதிகளை தளர்த்தி ஒப்பந்த தொழிலாளர்களை அப்பணியில் ஈடுபடுத்தப்படும்.
4. பகுதிநேர ஊழியர்களுக்கு காலநிலை ஊதியம் நிர்ணயிப்பது சம்மந்தமாக இன்னம் சில தினங்களில் அதற்கான உத்தரவு பிறபிக்கப்படும்.
5. கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் உபகோட்ட அளவில் உதவி மதிப்பீட்டு அலுவலர், வட்ட அளவில் சீனியர் மதிப்பீட்டு அலுவலர், மண்டல அளவில் தலைமை மதிப்பீட்டு அலுவலர் போன்ற பதவிகள் அனுமதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

தோழமையுள்ள



**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

## செய்திதுளிகள்

கணக்கீட்டு ஆய்வாளர் பதவியில் இருந்து வருவாய் மேற்பார்வையாளராக பதவி உயர்வு அளிக்கும் வாரிய பதவி உயர்வுக்குழு, தனது (டி.பி.சி) பரிசீலனையை முடித்துள்ளது. 550-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் உள்ளதாக தகவல் உள்ளது. பதவி உயர்வு ஆலோசனைக்குழு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே மேலும் சில விபரங்கள் அனுப்பி வைத்திட வேண்டும் என்று மேற்பார்வையாளர் பொறியாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதை அறிந்து மத்திய அமைப்பு தலையிட்டதன் அடிப்படையில் அந்த விவரங்களை சேகரிக்க வேண்டியதில்லை எனவும், டி.பி.சி. முடிந்துள்ள நிலையில் பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என நாம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், பதவி உயர்வில் உள்ள சில ஊழியர்கள் உள்ளதால் 30.05.2017 அன்றைய இரவோ அல்லது 31.05.2017 அன்று 60-க்கும் மேற்பட்டவர்களுக்கு பதவி உயர்வுக்கான உத்தரவு வழங்கப்படும்.

கணக்கீட்டாளரில் இருந்து கணக்கீட்டாய்வாளராக பதவி உயர்வு வழங்க டி.பி.சி முடிவு பெறும் நிலையில் உள்ளது. இந்த வார இறுதிக்குள் டி.பி.சி யை முடித்து பதவி உயர்வு வழங்குவார்கள் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.